**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**முன்னிலை : - திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் மாசித் திங்கள் 27 ம் நாள்

**இடைநிலை மனு எண். 614/2024 -ல்**

**அசல் வழக்கு எண். 42/2022**

ராஜ்குமார் ..... மனுதாரர்/1 ம் பிரதிவாதி

// **எதிர்**//

தேவேந்திரன் ...... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.அருட்செல்வன், B.A., B.L., அவர்களும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A.L, B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவில் மனுதாரருக்கு எதிராக கடந்த 19.11.2024 ம் தேதி வழங்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து மீண்டும் வழக்கை மேல் நடத்த உத்தரவிடக் கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7 மற்றும் 151 -ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுவின் சுருக்கம் :-**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவார். அசல் வழக்கு விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுவில் கடந்த 19.11.2024 ம் தேதியன்று மனுதாரரது தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டிருந்தது. மேற்படி தினத்தன்று

மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனைக்கு சென்றிருந்த காரணத்தினால் மேற்படி தேதியில் வழக்கறிஞரை சந்தித்து விவரம் தெரிந்து கொள்ள இயலவில்லை. அதனால் அன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராக முடியாமல் போய்விட்டது. எனவே மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவாகி உள்ளது.

மனுதாரரது தரப்பில் நல்ல நியாயமும், ஆவணமும் இருந்து வருவதால் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவாகி உள்ளதை ரத்து செய்து வழக்கினை மீண்டும் மேல் நடத்த வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. இல்லாவிடில் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும். மனுதாரர் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ இருக்கவில்லை. ஆகையால் மனுதாரருக்கு எதிராக கடந்த 19.11.2024 ம் தேதி வழங்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து மீண்டும் வழக்கை மேல் நடத்திட மனுதாரர்/1ம் பரதிவாதி தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-</u>**

மனுதாரரால் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் உண்மை நிலவரப்படிக்கும், நிலைநிற்க கூடியதல்ல. இதனடியில் குறிப்பாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர ஏனைய சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்.

மேற்படி அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக பலமுறை வாய்தாக்கள் அளிக்கப்பட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் காலம் தாழ்த்திவிட்டு தற்பொழுது பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிறகு இதுபோன்றதொரு மனுவினை அளித்திருப்பது எந்த விதத்திலும் ஏற்புடையதல்ல. மேற்படி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கினை கால தாமதப்படுத்தி வாதிக்கு கஷ்ட நஷ்டங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற ஒரே கெட்ட எண்ணத்தில் தற்பொழுது இந்த பிரதிவாதி இதுபோன்றதொரு மனுவினை அளித்துள்ளார்.

மேற்படி அசல் வழக்கில் 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்படும் அனைத்து மனுக்களும் மேற்படி அசல் வழக்கினை காலதாமதப்படுத்தும் கெட்ட எண்ணத்திலேயே தாக்கல் செய்யப்படுகிறது. வாதிக்கு யாதொரு நீதியின் பலனும் கிடைத்துவிடக்கூடாது என்ற எண்ணத்திலேயே பிரதிவாதி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

மேற்படி மனு பிரதிவாதியால் மருத்துவ சிகிச்சைக்கு சென்றிருந்த காரணத்தினால் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை என்று கூறியுள்ள நிலையில் அதுபற்றிய எவ்வித ஆவணங்களையும் முன்னிலைபடுத்தாமல் இந்த மனுவினை தாக்கல் செய்து இந்த எதிர்மனுதாரர்/வாதிக்கு தொல்லை கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் கறைபடிந்த கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகியுள்ளார். ஆகவே மனுதாரரின் மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரையை தாக்கல் செய்துள்ளார்.

**4) இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.**

**5) <u>தீர்வு</u> :-**

**1.** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

**2.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** மனுவினை பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது, தாவா சொத்தில் வாதிக்குள்ள உரிமையை மறைத்து மோசடியாக 1வது பிரதிவாதி 2 வது பிரதிவாதிக்கு செய்து கொடுத்த 09.12.2021ம் தேதியிட்ட கிரய சாசனம் செல்லதக்கதல்ல என விளம்புகை செய்து Null and Void என தீர்ப்பிற்காகவும் மற்றும் தாவா சொத்தை பொறுத்து எவ்விதமான கலன்களோ,

Alienation னோ 2 வது பிரதிவாதி செய்யக்கூடாது என உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார் என்பது தெரிய வருகிறது.

**4.** இந்நிலையில் மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் அசல் வழக்கில் கடந்த 19.11.2024 ம் தேதியன்று மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும், உடல் நலம் சரியில்லாத காரணத்தினாலும், நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினாலும் மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதையும், மேலும் இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால் மனுதாரர்/ 1ம் பிரதிவாதிக்கு அவரது தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதாலும், நீதியின் நலன் கருதி நிபந்தனையுடன் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**6) முடிவில்**, மனுதாரர்/1ம் பிரதிவாதி, எதிர்மனுதாரர்/வாதிக்கு செலவுத் தொகையாக ரூ.1000/-ஐ கடந்த 19.03.2025ம் தேதிக்குள் செலுத்தி வைக்க வேண்டும் என்றும், தவறும்பட்சம் தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. இம்மனுவினை மீண்டும் அழைக்க 19.03.2025.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2025-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11-ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)

மாவட்ட உரிமையியல் நீதிபதி

மன்னார்குடி.

**<u>குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>**

**இருதரப்பிலும்** : இல்லை

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)

மாவட்ட உரிமையியல் நீதிபதி

மன்னார்குடி.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் மார்சித் திங்கள் 27 ம் நாள்

**இடைநிலை மனு எண். 614/2024 -ல்**

**அசல் வழக்கு எண். 42/2022**

திரு. ராஜ்குமார், வயது 51, த/பெ. துரைராஜ், இந்து, சிவமதம், வசிப்பிடம், கதவிலக்கம் 8/118A, நடுத்தெரு, பரவாக்கோட்டை - 2, மன்னார்குடி டி.மு.இலாகா, தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.

.... மனுதாரர்/பிரதிவாதி

// எதிர்//

திரு.தேவேந்திரன், வயது 43, த/பெ.துரைராஜ், இந்து, சிவமதம், வசிப்பிடம், கதவிலக்கம் 10/666, மேலத்தெரு, பரவாக்கோட்டை - 2, மன்னார்டி டி.மு.இலாகா, தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.

.... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவில் மனுதாரருக்கு எதிராக கடந்த 19.11.2024 ம் தேதி வழங்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து மீண்டும் வழக்கை மேல் நடத்த உத்தரவிடக் கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7 மற்றும் 151 -ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 06.12.2024

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 09.12.2024

இம்மனுவின் மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.அருட்செல்வன், B.A., B.L., அவர்களும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A.L, B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. மனுதாரர்/1ம் பிரதிவாதி, எதிர்மனுதாரர்/வாதிக்கு செலவுத் தொகையாக ரூ.1000/-ஐ கடந்த 19.03.2025ம் தேதிக்குள் செலுத்தி வைக்க வேண்டும் என்றும், தவறும்பட்சம் தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.

02. இம்மனுவினை மீண்டும் அழைக்க 19.03.2025.

2025ம் ஆண்டு மார்ச் மாதம் 11-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை :- **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் நாள் புதன்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் பங்குனித் திங்கள் 05 ம் நாள்

**இடைநிலை மனு எண். 614/2024 -ல்**

**அசல் வழக்கு எண். 42/2022**

திரு. ராஜ்குமார், வயது 51, த/பெ. துரைராஜ், இந்து, சிவமதம், வசிப்பிடம், கதவிலக்கம் 8/118A, நடுத்தெரு, பரவாக்கோட்டை - 2, மன்னார்குடி டி.மு.இலாகா, தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.

.... மனுதாரர்/பிரதிவாதி

// எதிர்//

திரு.தேவேந்திரன், வயது 43, த/பெ.துரைராஜ், இந்து, சிவமதம், வசிப்பிடம், கதவிலக்கம் 10/666, மேலத்தெரு, பரவாக்கோட்டை - 2, மன்னார்டி டி.மு.இலாகா, தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.

.... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவில் மனுதாரருக்கு எதிராக கடந்த 19.11.2024 ம் தேதி வழங்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து மீண்டும் வழக்கை மேல் நடத்த உத்தரவிடக் கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7 மற்றும் 151 -ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 06.12.2024

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 09.12.2024

இம்மனுவின் மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.அருட்செல்வன், B.A., B.L., அவர்களும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A.L, B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. செலவுத்தொகை செலுத்தப்பட்டது.

02. மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

2025 ம் ஆண்டு மார்ச் மாதம் 19-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.